# முன்னோக்கிய பாதையை வழிகாட்டுதல்: சகலருக்குமான சுபீட்சம்

பாத்பைன்டர் நிறுவனம்
கொழும்பு
2015

உள்ளடக்கம்

முகவுரை.........................................2
01. திடமான பேரண்ட பொருளாதார அடிப்படைகளை பேணுதல்........................ 9
02. வர்த்தக சூழ்நிலையை மேம்படுத்துதல......12
03. காரணி சந்தைகள........................... ...15
3.1 நிலம.....................................15
3.2.உழைப்பு சந்தைகள்..................17
3.3.நிதி மற்றும் மூலதன சந்தைகள்.......................................................18
04. ஏற்றுமதிகளும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளும்...........................................20
05. சிறிய மற்றும் நடுத்தர தொழிற்முயற்சிகள்..24
06. விவசாய உற்பத்தி திறனை அதிகரித்தல்..26
07. கல்வி பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி..........................................28
08. பெருந்தோட்ட சமூகத்தை வலுவூட்டல்.......30
09. அரசுடமை தொழிற்முயற்சிகளின் (அ.தொ) சீர்திருத்தம்..........................................33
10. திறன்மிகு பொதுச்சேவை வழங்குதலை நோக்கி..........................................35
11.சமூக பாதுகாப்பு................................37
12. உருவாக்கிவரும் பாரிய செல்நெறிகளை பயன்படுத்திக்கொள்ளல்..........................39

முடிவுரை..........................................42

## முகவுரை

பாத்+பைன்டர் நிறுவகம் (பா.நி) இலங்கையில் நீண்ட காலமாக, ஓர் அறிவார்ந்த பொருளாதாரக்கொள்கை உருவாக்கத்தினை முன்மொழியும் ஒன்றாக செயற்பட்டு வருகின்றது.

பாராளுமன்ற தேர்தல்கள் தற்போது பெரும் அக்கறையோடு எதிர்நோக்கப்படும் வேளையில் இலங்கை தற்போது ஒரு புதிய அரசியல் சக்கரத்தின் நுழைவாயிலில் இருப்பதால், அது முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பங்களை அளிப்பதாக உள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பம் அரசியல் கட்சிகளின் விஞ்ஞாபனம் உருவாக்கும் செயற்பாட்டில் செல்வாக்கு செலுத்தக்கூடியதாகவும், பொது மக்களிடையே கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது. இந்தவகையில், பா.நி. முக்கிய கொள்கை பிரச்சினை குறித்து, தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதோடு, அவை இலங்கை பொருளாதாரத்தை ஒரு நிலையான வளர்ச்சி பாதையில் மாற்றுவதில் முக்கிய நிர்ணயிப்புகளாக செயற்படுகின்றன. இது, பல்வேறு பகிரங்க கருத்தரங்களில் தலை சிறந்த அறிஞர்களின் கருத்துரைகளால் ஆதரவளிக்கப்பட்டதோடு, பிறநாடுகளில் பெறப்பட்ட அனுபவங்களால் வளப்படுத்தப்பட்டதாய் அமைந்துள்ளது.இந்த ஆவணத்தில், ஒரு கருத்து நிலைப்பாட்டில் தங்கிய மாதிரியையோ அல்லது குறிப்பிட்ட பரிந்துரைகளையோ தவிர்த்து, நடைமுறை சாத்தியமான, யதார்த்த பூர்வமான செயற்படத்தக்க சீர்திருத்தங்களை, அரசியல் கட்சிகளின் பரிசீலனைக்காக மையப்படுத்தியிருக்கிறது. அனைத்து இலங்கையினரின் வாழ்வில் முன்னேற்றத்தை

மேம்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான ஈடுபாட்டினை காட்ட வேண்டும் என்ற உணர்விலேயே இவை முன்வைக்கப்படுகின்றன. இலங்கை பொருளாதாரம் நிலைபேறான உயர்ந்ததும், அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைய மேலும் சீர்திருத்தங்கள் தேவை என்பது அனைத்து அரசியல் கட்சிகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நோக்கமாக அமைந்துள்ளது. இலங்கை ஒரு "ஆர்வமிக்க சமுதாயமாக" மாறியுள்ளதோடு அது ஒரு உயர் மத்திய வருமான அந்தஸ்தை அடைந்து அதைவிட மேலே செல்ல விரைவாக விரும்புகின்றது. எனவே, இது அனைத்து அரசியல் கட்சிகளும், இலங்கை சமூகத்தின் சகல தரப்பினரிடையே உருவாகி வரும் சுபீட்சத்திற்கான ஆர்வங்களுக்கு பதிலிறுக்க வேண்டியுள்ளது. இவ்வகையில் இதனை செய்யாதுவிடின் புதிய செயற்பாடு எத்தகைய சனநாயகத் தன்மை கொண்டிருந்தாலும் அது மிகப் பாதிக்கத்தக்க அரசியல் சமூக விளைவுகளை கொண்டிருக்கும்.

இந்த வழிகாட்டல் ஆவணமானது அரசியல் கட்சிகளின் கொள்கை உருவாக்கல் செயற்பாட்டில் அனைத்து இலங்கையரின் ஆர்வங்களை அடைந்து கொள்ளுமுகமாக, விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சியையும், அது அனைத்தையும் உள்ளடக்கியதாயும் பிரதேச ரீதியாக சமத்துவமாக அமைந்துள்ளதாயும் அமைய உதவி செய்ய நோக்கம் கொண்டுள்ளது. மாற்றத்திற்காக இவ்வழிகாட்டல் ஆவணத்தை பரப்புரை செய்கையில், குறை உற்பத்தி திறன் விவசாயம்/ குறை தொழிற்நுட்பம் இயந்திரமயமாக்கல் மற்றும் மரபு சேவைகள் (சில்லறை/ மொத்த வியாபாரம், நிர்மாணம் மற்றும போக்குவரத்து மற்றும் தொடர்பாடல், பொது நிர்வாகம்) என்பவற்றை குணங்களாக கொண்ட பொருளாதாரத்தை ஒரு நவீன பொருளாதாரமாக உயர் உற்பத்தி விவசாயம்/ உயர்ந்த தொழிற்நுட்ப இயந்திரமயமாக்கம்

மற்றும் கப்பல், விமானச்சேவை, தகவல் பரிமாற்றல் தொழிற்நுட்ப, (வர்த்தக செயல்முறை வெளிவழங்கல்/ அறிவு செயல்முறை வெளிவழங்கல்) நிதிச்சேவைகள் மற்றும் கல்வி/ சுகாதாரம் போன்ற நவீன சேவைகளின் அடிப்படையிலான ஒரு நவீன பொருளாதாரமாக மாற்றுவதில் அக்கறை கொண்டுள்ளது. பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் முக்கியமானதும், அவசரமானதும் நடவடிக்கைகளையும் அதனது உற்பத்திதிறன்/ போட்டித்தன்மை என்பவற்றை அதிகம் தேவைப்படும் அடிப்படை சீர்திருத்த பொதி மூலமாகவும் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் பொருளாதாரத்தை நிலைமாற்றுவதென்பது முடியாதவொன்றாகும்.

கடந்த ஆறு மாதங்களில் லீகுவான் யூவின் இலங்கை தேர்தல் ''இல்லாத வளங்களை ஏலத்திற்கு விடல்'' என்ற கூற்றிற்கு அதிகம் நம்பகத்தன்மை கொடுக்கப்பட்டுள்ளது. வரவுசெலவு திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மக்களை கவரக்கூடிய நடவடிக்கைகள் (நவம்பர் 2014) மற்றும் பெருமளவில் இடைக்கால வரவுசெலவு திட்டத்தில் (ஜனவரி 2015) சேர்க்கப்பட்டவை என்பவை இறை உறுதித்தன்மையை குறைவுபடுத்தியுள்ளது.

2014இல் வரவுசெலவு திட்ட குறைநிலையானது, மொ.உ.உ இல் 6%மாக அமைய இலக்கானது 5.2%மாக அமைந்திருந்தது. வருமானம் மற்றும் செலவு என்ற இரு முனைகளிலும் அவசர பரிகார நடவடிக்கைகள் இல்லாத நிலையில், இறைநிலையின் கீழ் நிலையானது மேலும் மோசமாக கூடியதாக இருக்கின்றது. (செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு பகுதி 2ஐ பார்க்கவும்) எனவே, அரசியல் கட்சிகள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் போது அதிக அளவிலான இறை பொறுப்புத்தன்மையை

செயற்படுத்தப்படவேண்டும். இந்த நாட்டின் மக்கள் நன்கொடைகளால் தவறாக வழிநடத்தப்படக்கூடாது. இவைகள் இறுதியில் உயர் பணவீக்கத்தினால் அல்லது, வரிகள்/ நிர்வகிக்கப்பட்ட விலை உயர்வுகள் என்பவற்றால் இல்லாமல் செய்யப்பட்டுவிடும். வரவுசெலவுதிட்ட பேச்சு (நவம்பர்2014) மற்றும் இடைக்கால வரவுசெலவு திட்டம் (ஜனவரி2015) என்பவை அரசாங்க வரவுசெலவு ஏற்படுத்திய துளையை பாராளுமன்ற தேர்தலுக்கான அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் சுயவிருப்புகளின் அடிப்படையில் அமைந்துள்ள உறுதிமொழிகள் மோசமாக்கிவிடவில்லை. இது தொடர்பாக, இலங்கையானது நல்ல நடைமுறைகளை பின்பற்றவேண்டும். இவை உலகத்தில் அதிகமான எண்ணிக்கையிலான நாடுகளில் பின்பற்றப்படுவனவாகும். எல்லா தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்கப்பட்ட அன்பளிப்புகளும் மானியங்கள் மற்றும் ஏனைய நலன்புரி நடவடிக்கைகள் என்பவற்றின் செலவுகள் மதிப்பிடப்படுவதோடு அவற்றின் அதிகரித்து செல்லும் செலவுகளுக்கான நிதிப்படுத்தலுக்கான நடவடிக்கைகள் அடையாளப்படுத்தப்படவேண்டும். கடந்த காலத்தின் கட்சி விஞ்ஞாபனங்களில் முக்கிய குணாம்சங்களாக கருதப்பட்ட ‘‘இல்லாத வளங்களை ஏலமிடுதல்’’ என்ற நிலையிலிருந்து தெளிவாக விலகி செல்வதற்கு இது உதவி செய்யவேண்டும்.

முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டியது பேரண்ட பொருளாதார அடிப்படைகள் குறைவுப்படுத்தப்பட்டுள்ளதோடு வளர்ச்சிக்கான தூண்டுதல்களும் பலவீனப்படுத்தப்பட்டுள்ளன. இது பெரும்பாலும் அதிகமான அளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்ட அமைப்பில் ஏற்பட்ட அரசாங்க மாறுதல் மற்றும் பேரண்ட பொருளாதார நோக்கினது சீரழிவு காரணமாக ஏற்பட்ட நிலைக்குலைவுகளும் மற்றும் பொருளாதார நிலையற்ற தன்மை என்பனவாகும்.

ஒரு புதிய அரசியல் சகட ஓட்டமானது கடந்த நான்கு தசாப்தங்களையும் குணாம்சப்படுத்திய நிறுத்தி செல்லும் கொள்கைகளின் சகட ஓட்டத்தை திரும்ப செய்தலிலிருந்து வெளியேறுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை தருகிறது. 2012-2014 காலப்பகுதியில் கற்றுக்கொள்ளவேண்டிய முக்கிய பாடமானது மக்களின் வாழ்க்கையை தொடுகின்ற நிலைபேறான வளர்ச்சியை அடைந்து கொள்வதற்கு உறுதிப்படுத்தல் நடவடிக்கைகள் மாத்திரம் போதாது என்பதாகும். அவைகள் அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களால் குறை நிரப்பப்படவேண்டும். அவையே உற்பத்தி திறன் - போட்டித்தன்மை என்பவற்றை ஊக்குவிப்பதன் மூலமாக வளர்ச்சி சட்டகத்தை வலுவூட்டச் செய்வதாக அமையும். இந்த ஒரு வழியிலேயே மக்களினுடைய வருமானத்தில் தொடர்ச்சியான அதிகரிப்புகளை பெற்றுக்கொள்ளமுடியும். நன்கொடைகள் மற்றும் மானியங்கள் என்பவை உற்பத்தி திறனோடு தொடர்பற்று இருப்பதால் அவற்றை நிலைபேறாக வைத்திருப்பது முடியாத ஒன்று இந்த ஆவணமானது நிலைபேறானதும் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை அடைந்துக்கொள்வதற்கான வழிவகைகளை சித்தரிப்பதற்கு முனைகிறது. முக்கியமான செய்தி என்னவெனில் இலங்கைக்கு ஒரு புதிய வளர்ச்சி மாதிரி தேவைப்படுகிறது. அது தனியார் முதலீட்டு அடிப்படையில் அமைந்திருக்கவேண்டும். நாட்டினது இறை குறைநிலை மற்றும் பொது கடன் இயக்கமானது அரச சார்பிலான வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி செயன் முறைக்கான சாத்தியத்தை இல்லாமல் செய்கிறது. உள்நாட்டு தனியார் முதலீடு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு என்பவையே பொருளாதாரத்தை முன்னோக்கி செலுத்துவதற்கு ஒரு இயக்கு சக்தியாக அமையும். தனியார் தொழில் முயற்சிகளுக்கு ஆக்கப் பூர்வமான சக்தியை வழங்குவதற்கான இடமானது சிறிய விவசாயிகள் மற்றும் நுன் தொழில் முயற்சியாளர்கள்

தொடக்கம் பெரிய வியாபார அமைப்புகள் வரை பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வியாபார சூழ்நிலையை முன்னேற்றுதல் என்பவற்றை மேம்படுத்துதல் வேண்டும்.

இந்த ஆவணமானது, பின்வருவன குறித்த நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது. பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டை பேணுதல், வர்த்தக சூழ்நிலையை முன்னேற்றுதல், காரணி சந்தைகளை வலுப்படுத்துதல், ஏற்றுமதிகளை மேம்படுத்துதல், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை மேம்படுத்துதல், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி விவசாய உற்பத்தி திறனை அதிகரித்தல், கல்வி, திறன்கள் மற்றும் பயிற்சி என்பவற்றை மேம்படுத்துதல், அரசுடமையான தொழில் முயற்சிகளை சீர்திருத்துதல், பொது சேவை வளங்களை முன்னேற்றுதல், தோட்ட சமுதாயத்தை வலுவூட்டல், சமூக பாதுகாப்பு மற்றும் சில உருவாகி வருகின்ற பாரிய செல்நெறிகளை பயன்படுத்தி கொள்ளுதல் என்பனவாகும். இத்துறைகள் அனைத்திலும் அக்கறை வேண்டப்படுவதோடு அவற்றுள் பல நடுத்தவனை மற்றும் நீண்டகால சவால்களாகும். பாராளுமன்ற தேர்தலுக்குப் பின்னால் உருவாகின்ற அரசாங்கமானது பொருளாதாரத்தை உறுதியடைய செய்யும் மற்றும் வளர்ச்சி வீதத்தை முன்னிறுத்தி ஊக்குவிக்கும் சில நடவடிக்கைகளை முன்னுரிமை படுத்துவதோடு வேகப்படுத்தவும் வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளை ஏனையவற்றோடு அரச கூட்டுத்தாபனங்களின் சீர்த்திருத்தம் மற்றும் வர்த்தக சூழ்நிலைகளின் முன்னேற்றம் என்பவற்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

திறனற்ற (அடிக்கடி நட்டமடைகின்ற) அரசுடமை தொழில் முயற்சிகளின் நடவடிக்கைகள், நாட்டினது அபிவிருத்தி வளமார்ந்தங்களில் ஒரு

பின்னடைவை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இப்பிரச்சினை குறித்து கவனம் செலுத்த பல்வேறு கொள்கை தெரிவுகள் உண்டு. அவை தனியார் மயப்படுத்துதல், கேந்திர முதலீடுகள்/ பொது தனியார் பங்குபற்றல்கள், பிணையச்சந்தையில் சிறுபான்மை உரித்துகளை பட்டியலிடல் மற்றும் தனியார் முகாமைத்துவத்தை பெற்றுக்கொள்ளல் என்பவை ஆகும். கடைசியை தவிர, ஏனையவை அனைத்தும் வரவுசெலவு திட்டத்திற்கு அதிகம் தேவையானதும் நன்மை தரத்தக்க வருமானத்தை ஈட்டக்கூடியவையாகும். (8ம் பகுதியை பார்க்கவும்) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் முதலீடுகள் போருக்கு பிந்திய காலக்கட்டத்தில் அதிகம் ஏமாற்றம் தரக்கூடியதாக அமைந்துள்ளது. எனவே உயரிய முன்னுரிமை அளிக்கப்படவேண்டியவை உறுதியானதும், எதிர்வு கூறக்கூடிய கொள்கைகளும் இலகுவில் காரியங்களை செய்யக்கூடிய முறையை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகள் என்பனவாகும். (2ம் பக்கத்தையும் பார்க்கவும்)

தற்போதைய காலம், இலங்கையின் துரித அபிவிருத்திக்கு கணிசமான உள்ளார்ந்தங்களை வெளிப்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமானதாக இருப்பதால், இந்த வழிகாட்டல் ஆவணத்தை உருவாக்குவதற்கு பா.நி, ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது. சமாதானத்தை மீளமைத்தல், கேந்திரமயமான அமைவிடம், கல்வியறிவுள்ளதும் பயிற்றத்தக்க தொழிலாளர், திருந்திய உட்கட்டமைப்புகள், புதிய அரசியல் சக்கரத்தின் ஆரம்பம் என்பவை அனைத்தும், பிரதான கொள்கை முயற்சிக்கான காலத்தை பொருத்தமுள்ளதாக்கியிருப்பதோடு, மையப்படுத்தியதும், நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாட்டின் முன்னோக்கிய பாதையை வழிகாட்டி நடாத்தி செல்வதற்குரியதாகவும் அமைந்துள்ளது.

## 01.திடமான பேரண்ட பொருளாதார அடிப்படைகளை பேணுதல்.

பொருளாதாரம் தாரளமயப்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கையானது, பேரண்ட பொருளாதார அடிப்படைகள் நிலையற்றிருப்பதன் விளைவாக நிறுத்தி-செல்லல் என்ற வட்டத்தினை மீட்டுதல் என்ற பண்பினை கொண்டதாக திகழ்கிறது. நிலைபேற்று தன்மையற்ற வரவு செலவு திட்ட பற்றாக்குறைகளே, இந்த நிலையற்ற தன்மைக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. எனவே, ஒரு நிலைபேற்றுதன்மையுள்ள நடுத்தவணை வரவு செலவு திட்ட சட்டகத்தை பேணுவது மிக முக்கியமான ஒன்றாகும். இது, பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதோடு, சென்மதி நிலுவைகளை உறுதிப்படுத்தவும் உதவும். அத்தோடு இது, குறைந்த வட்டி வீதங்களையும் நிலையானதும், போட்டித்தன்மைமிக்க நாணயத்திற்கான நிலைமைகளையும் உருவாக்கும். மேலும் இது, நிலைபேறான கடன் இயங்கு தன்மையை பேணக்கூடிய பொருத்தமான சட்டகத்தினையும் வழங்கும் திடமான பேரண்ட பொருளாதார அடிப்படைகள் ஒரு உறுதியான சட்டகத்தினை அபிவிருத்தி

செய்வதற்கு அவசியமான முன் நிபந்தனைகள் ஆகும். இலங்கை தற்போது ஒரு புதிய கொள்கை போக்கில் இயங்குகின்றது என்பதை மனதிலிறுத்த வேண்டியது அவசியமானவொன்றாகும். இது கீழ்-மத்திய வருமான நாட்டு நிலைமைக்கு உயர்த்தப்பட்டதன் விளைவாகும். இது, அதிகரித்த அளவில், மதிப்பீடும் நிறுவனங்கள் மற்றும் மூலதன சந்தைகளால் வலியுறுத்தப்படும் ஒழுங்கினை எதிர்நோக்குவதாக உள்ளது. இது பேரண்ட பொருளாதார கொள்கை உருவாக்கலில் ஒரு முக்கியமான காரணியாக தொடர்ந்து செயற்படும்.

இது தொடர்பில் மக்கள் மயமான வரவுசெலவு திட்டம் (நவம்பர்2014) மற்றும் இடைக்கால வரவுசெலவு திட்டம் (ஜனவரி2015) என்பவற்றில் பிரதிபலிக்கப்பட்ட இழக்கப்பட்ட இறை ஒழுங்கு அக்கறைக்குரிய ஒரு மூலமாகும். இதனை தடை செய்வதற்கும், இறை ஒன்று திரட்டலில் ஏற்படும் இழப்புகளை திருப்பியமைப்பதிலும் முன்னுரிமை காட்டப்படவேண்டும். முகவுரையில் கூறப்பட்டுள்ளவாறு, எல்லா கொடைகளும் மானியங்கள் மற்றும் ஏனைய நலன்புரி நடவடிக்கை செலவுகள் மதிப்பிடப்படுவதோடு, அவற்றை நிதிப்படுத்தும் முறைகள் அடையாளங் காணப்படவேண்டும். இத்தகு நடவடிக்கைகள் பொது மக்களின் பார்வைக்கு முன்வைக்கப்படுவதோடு, எல்லா உரித்தாளர்களும் அவற்றை ஆக்க பூர்வமாக மதிப்பிடக்கூடிய சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும்.

**செயற்பாடுகள்**

- நிலைபேறான நடுத்தவணை வரவு செலவு திட்ட சட்டகத்தினை பேணல்.
- வரி அடித்தளத்தை விரிவுபடுத்துதல் மற்றும் வரி நிர்வாகத்தை மேம்படுத்துதல் மூலமாக வருமான செயலாற்றலை பலப்படுத்துதல்.
- இந்த வகையில் வரி சீர்திருத்த ஆணைக்குகுழுவின் சிபாரிசுகளில் இன்றும் பிரயோகிக்கப்படாதவைகளை நடைமுறைப்படுத்த கவனம் செலுத்தப்படவேண்டும்.
- வருமான சேகரிப்பில் நேரடி வரிகளின் பங்கினை அதிகரித்து குறைவான பின்னோக்கிய வரி அமைப்பினை அடைந்துகொள்ளல்.
- தெளிவாக நிறுவப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் கடுமையான பொது முதலீட்டு மதிப்பீட்டினை நடாத்துதல், நடைமுறை செலவினை

நியாயா பூர்வமாக்குவதோடு ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி உபாய முறையில் அமைந்த பொது முதலீட்டினை முன்னுரிமைப்படுத்தி அடிப்படையிலான விளைவு வீதங்களின் மதிப்பீட்டின் மூலமாக செய்தல்.

உறுதியான பேரண்ட பொருளாதார அடிப்படைகள், அத்தியாவசியமான தேவைகளாக இருக்கையில், 8சதவீதத்திற்கு மேலதிகமான வளர்ச்சியினை பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவை விரிவுபடுத்தாமல் நிறைவேற்றிக்கொள்ளமுடியாது.

தொடர்ந்துவரும் பகுதிகள், எவ்வாறு இதனை செய்வது என்பது குறித்து விரிவாக எடுத்துரைக்கும்.

## 02.வர்த்தக சூழ்நிலையை மேம்படுத்துதல்.

10-20 வருட தொடர்ச்சியான காலத்திற்கு மேலாக, 8% அல்லது அதற்கு அதிகமாகவோ வளர்ச்சியினை பதிவுசெய்தலென்பது கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் வெற்றியடைந்த நாடுகளில் எய்தியதை போல, தெளிவாக-இலகுவான வொன்றாகும். இது சாத்தியமாக, வியாபார சூழலை வலுப்படுத்துவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். தனியார் துறையின் பலமும், இயக்கத்தன்மையும், முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையின் அபிவிருத்தி எதிர்பார்ப்புகளின் முக்கிய நிர்ணயிப்புகள் ஆகும். இலங்கையின் வரவு செலவு திட்ட பற்றாக்குறையையும், கடன் தோற்றத்தையும் கொண்ட ஒரு நாடு இயக்கமுள்ள அரசால் விசைப்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான தலைமை நிலையை கொண்டிருக்கவில்லை. (சீனா போன்ற உறுதியான பற்றாக்குறையையும், கடன் விளைவுகளையும் கொண்ட நாட்டைத்தவிர.) இங்கு ஒரு பிரதான சவாலாக அமைவது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பெருப்பித்தல் ஆகும். வெளிப்படையான வர்த்தகத்திற்கு சாதகமான கொள்கைகளும், கடுமையான கட்டுப்பாடுகளை அகற்றும் செயற்பாடுகளின் மூலமாக கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஏற்படும் குறைப்பும், இந்த வகையில் முக்கியத்துவமிக்கன.

### செயற்பாடுகள்

- உரித்தாளருகளுடனான கலந்தாலோசனையின் அடிப்படையில், எதிர்வு கூறத்தக்கதும், ஒத்ததான கொள்கைகளும்.

- விதிமுறைகளையும் மற்றும் செயற்பாடுகளையும் கொடுக்கல் வாங்கல் செலவுகளை குறைப்பதற்காக நேர்படுத்துதல்.
  (பொருத்தமானவிடத்து சாத்தியப்படும் இடங்களில் ஓர் இடத்தில் பயனுறு வசதிகளை கொள்ள நிலையங்களை அமைத்தல்)
- உலக வங்கியின் வியாபாரம் செய்தல் குறியீட்டில் இலங்கையின் இடத்தை முன்னேற்றுதல்.
- ஒப்பந்தங்களின் தூயத்தன்மையை நிலைநாட்டுகின்றதும் துரிதமான தீர்வுகளை பெற்றுகொள்வதற்குமான உறுதியான சட்ட கட்டமைப்பு.
- ஒழுங்குப்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் விதிமுறைகளை கடுமையாக பிரயோகித்தல் மற்றும் தற்துணிவினை குறைத்துக்கொள்ளல் மூலமாக வாடகை தேடும் சந்தர்ப்பங்களை குறைத்துக்கொள்ளல்.
- அரச மற்றும் தனியார் துறைகளின் அவை குறித்த வகிபாகம் பற்றிய தெளிவை வழங்குதல். அரச துறையை பொறுத்தவரை அது தனியார் துறையோடு வர்த்தக நடவடிக்கையில் போட்டியிடுமானால் அது சமதளத்தில் அமைந்துள்ளதாக இருக்கவேண்டும்.
- பாரிய உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய செயற்திட்டங்களில் பொது- தனியார். பங்குடமைகளுக்கு சந்தர்ப்பங்களை அடையாளப்படுத்துதல்.
- ஒப்பந்தங்கள் மற்றும் கொள்வனவு செயல்முறைகளில் வெளிப்படைத்தன்மையையும் போட்டியினையும் அறிமுகப்படுத்தல்.
- சட்டவாட்சியை பேணுதலும் தண்டனைகளுக்கு உட்படுத்தலை தவிர்த்தல் என்பவை ஊடாக ஒரு

ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதன் மூலம் முதலீட்டாளரின் நம்பிக்கையை ஊக்குவித்து பல்வேறு பொருளாதார சமூக நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு வசதிப்படுத்துதல்.

- இன, மத, பதற்ற நிலைமை காரணமாக பொருளாதாரத்தில் சுமத்தப்பட்டுள்ள இடர் முதன்மையை – குறைப்பதற்காக ஒற்றுமை உள்ள சமுதாயத்தை உருவாக்குதல்.
- பாரம்பரிய மற்றும் புதிதாக உருவாகியுள்ள பொருளாதார பங்காளர்களிடையே இலங்கையினுடைய தூதரக தொடர்புகளை பயன்படுத்துதலும், பலப்படுத்துதலும், முக்கியமாக வெளிநாட்டு முதலீடுகளை கவரச் செய்தல் மூலமாக இலங்கையின் சமூக பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்கு இவற்றை பயன்படுத்துதல்.

## 03.காரணி சந்தைகள்

### 3.1 நிலம்

அனைத்து இலங்கையருக்கும் நிலச் சந்தையானது சிறப்பாக செயற்பட முன்னுரிமை அளித்தல். தற்போது வியாபாரத்திற்காக நிலத்தை பெற்றுகொள்ளல் ஒரு பிரதான தடையாக அமைந்துள்ளது. ஏறக்குறைய 80%மான நிலங்கள் அரச சொத்துக்களாக இருக்கின்றன. எனவே நிலத்தை சொந்தமாக்கல் வாடகைக்குவிடல், அதனை உபயோகப்படுத்துதல் என்பவற்றை பொறுத்தவரை தூயதும் வெளிப்படையானதுமான கொள்கைகள் அமையவேண்டியது முக்கியமானதாகும்.

தற்போது வேலைப்படையில் 30%மானோர் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளபோது இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10சதவீதத்திற்கே வகை கூறுவதாக உள்ளது. எனவே நில உபயோகம் மற்றும் உற்பத்தி கலவைகளின் மாதிரிகள் மூலமாக உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு கிராமிய வருமானத்தை கூட்டுவதற்கான வழிவகையாக ஆராயப்பட வேண்டும். நகர புறங்களை பொறுத்தவரை அரசாங்க முகவர் நிலையங்களான புகையிரதம், தபால் திணைக்களம், நாடுமுழுவதிலும் பெறுமதிமிக்க நிலத்தை சொந்தமாக கொண்டுள்ளது.

இவை தற்போது குறைவாகவே உபயோகத்தில் உள்ளன. இத்தகைய நிலங்களின் பெறுமதியை அதிகரித்த உற்பத்தி மிகு வர்த்தக உபயோகத்திற்காக விடுவிக்கப்படவேண்டியது முக்கியமானது. இந்த செயன்முறையினால் அரசாங்கத்திற்கு அதிகமாக தேவைப்படும் வருமானத்தை திரட்டிக்கொள்ள முடியும். நில உபயோகத்தை நடைமுறைப்படுத்தக்கூடியதும் தத்துவார்த்த முறைகளுக்கு அப்பாற்பட்ட

முறையில் உத்தமப்படுத்தக்கூடிய ஒரு முழுமையான அணுகு முறைக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு அதிகரித்த வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் என்பவற்றின் மூலமாக நன்மைகளை உருவாக்குவதோடு இது தேசிய நலனையும் வர்த்தக யதார்த்தங்களையும் சமப்படுத்துவதாக அமையும்.

**செயற்பாடுகள்**

- நெல்லில் சுய பூர்த்தி (மேலதிக உற்பத்தி) மற்றும் தேயிலை, இறப்பர், தெங்கு நிலங்களில் இலாபத்தன்மை குறைந்து செல்லல் என்ற பின்னணியில் நில உபயோகம் மற்றும் உற்பத்தி கலவை என்பவற்றை மீள்ளாய்வு செய்தல்.
- அரசாங்க முகவர் நிலையங்களான புகையிரதம் மற்றும் தபால் திணைக்களங்கள் உட்பட அவற்றின் நகரப்புறங்களில் குறை உபயோகத்திலுள்ள அரச நிலங்களின் பெறுமதியை விடுவித்தல்.
- நிலத்தினுடைய அதிகரித்த அளவிலான உற்பத்தி உபயோகத்தை தற்போது தடை செய்யும் நில சட்டவாக்கங்களை மீளாய்வு செய்தல்.
- கைத்தொழில் உபயோகத்திற்கான நிலங்களை குத்தகைக்கு விடுதல், மற்றும் அவற்றினுடைய உரிமை என்பவை தொடர்பாக தெளிவானதுமான, வெளிப்படையிலானதுமான கொள்கைகள் கைத்தொழில் பூங்காக்களின் பரப்பு அவற்றினுடைய நோக்கம் குறித்து ஒரு தெளிவு இருக்கவேண்டும்.
- முன்னதாகவே அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்களும் நேரடியாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நில வங்கி ஒன்றை அபிவிருத்தி செய்தல்.

## 3.2 உழைப்பு சந்தைகள்

தற்போது உழைப்பு சந்தையில் காணப்படும் இறுக்கமான தன்மைகள் உயர் பெறுமதிமிக்க தொழிற்வாய்ப்புகளை உருவாக்குவதற்கு ஊக்கமளிப்பதாக இல்லை. தொழிலாளர்களின் உரிமைகள் முதலீட்டாளர்கள் பெற்றுக்கொள்ளுகின்ற வருமான வீதங்கள் மற்றும் வேலைவாய்ப்பு என்பவற்றுக்கிடையே ஒரு சமத்துவ நிலையை கொண்டு வருவதற்கான அணுகு முறை ஒன்றை கொண்டு வருவதே மிக முக்கியமானது. தற்போதைய தொழிற்சட்டங்கள் முறையான துறைகளில் தற்காலிக மற்றும் நிரந்தரமற்ற தொழிற்வாய்ப்புகளின் அதிகரிப்பினை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இதற்கு மேலாக முறைசாரா துறைகளில் செயற்படும் முயற்சிகள் தங்களுடைய நடவடிக்கைகளை உயர்த்துவதற்கு ஊக்கமளிக்கப்படாததோடு முறையான துறைக்கு உழைப்பை பொருத்தவரை உயர்ந்த செலவு மிக்கதாக உள்நுழைகின்றனர். இந்த நாட்டில் மொத்தமான தொழில் நியமங்கள் அதிகளவு நெகிழ்ச்சி உள்ள தொழிற்சட்டங்கள் நிலவுகின்ற சூழலில் எதிர்பார்ப்பதை விட மிக குறைவாக இருப்பது ஒரு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதற்கு மேலாக உயர் உற்பத்தி திறன்/ வருமானம் வேலைவாய்ப்பு என்பன குறைக்கப்பட்டு வருகின்றது.

### செயற்பாடு

- உழைப்பு சந்தையில் அதிகளவு நெகிழ்ச்சி தன்மையை அறிமுகப்படுத்துவதற்கு சட்டவாக்கம் பற்றி ஒரு புத்தாக்கமுள்ள முத்தரப்பு (அரசாங்கம்/ தொழிற்தருனர்/ தொழிற்சங்கம்) மீளாய்வு ஒன்று

தேவைப்படுகின்றது. இதன் மூலம் தொழிலாளர் பாதுகாப்பு, முதலீட்டாளர்களின் வருமான வீதங்கள் மற்றும் உயர் பெறுமதிமிக்க தொழிற்வாய்ப்புகளை உருவாக்குதல் என்பவற்றிற்கிடையே சமத்துவ நிலையை பேணக்கூடியதாய் இருக்கும்.

## 3.3 நிதி மற்றும் மூலதன சந்தைகள்

பொருளாதாரத்தின் உயிர் நாடியான நிதித்துறை மற்றும் மூலதன சந்தைகள் அபிவிருத்தி செய்தல என்பது, நிதி ரீதியான இடை தரகர்கள் திறனை அதிகரித்து செல்வதற்கும் உற்பத்தி நோக்கங்களுக்காக மூலதனத்தை ஒதுக்குவதற்கும் முக்கியமான ஒன்றாகும்.

சர்வதேச ரீதியில் ஒப்பிடும் போது, வங்கித்துறையின் நடைமுறைச் செலவுகள் அதிகமாக காணப்படுகின்றன. இதற்கு காரணம், பல வங்கிகள்/ கிளைகள் உருவாக்கும் உயரிய மேலதிகம் ஆகும். இது போட்டியிடமுடியாத நிலைக்கான பரவல்கள் (வைப்பிலிடுவதற்கு கடன் வழங்குவதற்குமான வீதங்களின் வித்தியாசங்கள்) பொருளாதாரத்தின் செலவுகளை அதிகரிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இவற்றிற்கு மேலாக சிறிய வங்கியல்லாத நிறுவனங்களின் நீண்ட எண்ணிக்கை நிதித்துறை தொடர்பிலான அபாயத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. தனிப்பட்ட நிறுவனங்களும், அமைப்பின் உறுதிப்பாடுகளுக்கும் இடையில் விட்டுக்கொடுப்புக்கள் இருந்த போதிலும் பின்னையதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். ஏனெனில் அதன் தொடர் விளைவுகள், நிதிச்சேவை துறையை முழுமையாக பாதிக்கக்கூடியதாகும். ஆகவே நிதித்துறையின் ஒன்று திரட்டலுக்கு ஒரு நியாயம் உண்டு.

மேலதிகமாக தற்போது இடம் பெற்றுவரும் ஒன்று திரட்டலும் மூலதன சந்தை அபிவிருத்தியும் ஆழப்படுத்தபட வேண்டும். இதன் மூலமாக நிறுவனங்களின் உறுதித்தன்மையை வளர்த்தெடுப்பதோடு, பொருளாதாரத்தை நவீனப்படுத்துவதற்கான தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள புதிய பொருட்களை அபிவிருத்தி செய்யக்கூடியதாக இருக்கும். முதிர்வடையும் சனத்தொகையின் விசேட தேவைகளும் ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

**செயற்பாடு**

- நிதித்துறையின் ஒன்றுதிரட்டுதலை உறுதி செய்தலானது , பாரிய உறுதித்தன்மைக்கு வழிவகுப்பதோடு, பொருளாதாரத்தின் சிறிய நடுத்தர தொழிற்முயற்சிகள், ஆரம்ப முயற்சிகள் மற்றும் வியாபார விரிவுகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு நிதிகளை பெற்றுக்கொள்வதை அதிகரிக்கின்றது.
- நீண்டகால கடன் சந்தையை மேலும் அபிவிருத்தி செய்தல்.
- மறைமுக முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் மூலதனமிடுவோரை ஊக்குவித்தல்.
- ஈடு வைக்கும் கைத்தொழிலை அபிவிருத்தி செய்து ஆர்வமிகு சமுதாயத்திற்கு வீடுகளை சொந்தமாக்கும் இயலுமைத்தன்மையை அபிவிருத்தி செய்தல்.
- ஓய்வூதிய கைத்தொழிலை ஊக்குவித்து வயது முதிர் சனத்தொகையின் தேவைகளுக்கு கவனம் செலுத்துதல்.

## 04.ஏற்றுமதிகளும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளும்

வளர்ச்சியானது சந்தையினால் கட்டுப்படுத்தப்படுவதால், இலங்கை போன்ற சிறிய நாடுகள் ஏற்றுமதி வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை வழங்கவேண்டியுள்ளது. இரண்டு கோடி மக்களை மட்டுமே கொண்ட உள்நாட்டு சந்தையுடன், துரித பெருக்கமின்றி, 8வீதத்திற்கு மேலான நிலைபேறான வளர்ச்சியை பேணுவதென்பது சாத்தியமான ஒன்றல்ல. தற்போது பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (மொ.உ.உ) 20வீதத்திற்கே வகை கூறுகின்றது. மலேசியா, தாய்லாந்து, வியட்னாம் போன்ற நாடுகளில் இந்த வீதமானது மொ.உ.உ வில் 70-75%மாக உள்ளது. இதற்கு மேலாக, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் வெற்றி பெற்ற நாடுகளின் அனுபவமானது, வெளிநாட்டு நேரடி முதலீடு, (வெ.நெ.மு) ஏற்றுமதி பெருக்கம் (வர்த்தகம்-முதலீட்டு தொடர்பு) என்பவற்றிற்கும் நிலைபேற்று அடிப்படையிலான அதிகரித்த வளர்ச்சிக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பினை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது, தற்போதைய வெ.நே.முதலீடு மொ.உ.உ இல் 2வீதமாக இருப்பதை குறைந்தது 5வீதமாக இரட்டிப்பதாகும்.

இலங்கை 250கோடி மக்களை கொண்ட சந்தைக்கு முன்னுரிமை வழங்கல் மூலமாக-கட்டற்ற வர்த்தக ஒப்பந்தங்களை (க.வ.ஒ) சீனா (அடுத்த ஆண்டில் நிறைவு செய்யப்பட இருக்கின்றது.) இந்தியாவுடன் செய்வதன் மூலமாக கணிசமான நன்மைகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. இத்தகைய இருதரப்பு க.வ.ஒன் இணைந்த விளைவாக இலங்கையிலும் இந்தியாவிலும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியும், வர்த்தக அச்சு சட்டவாக்கமும்

அதனூடாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான கடல் கடந்த அந்தஸ்து என்பவை காரணமாக, இந்த நாட்டின் அபிவிருத்தியின் வாய்ப்புகளுக்கு ஒரு நிலைமாற்ற பாதிப்பினை ஏற்படுத்துவதாக அமையும். வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் ஏற்றுமதிகளின் ஒட்டுமொத்த தோற்றப்பாடானது, பிரதம மந்திரி மோடியின் ''இந்தியாவை உருவாக்கல் கொள்கை'' மற்றும் சீனாவின் ''கடல் பட்டு பாதை முனைப்பு'' என்பவற்றால் முன்னேற்றமடையக் கூடியதாக உள்ளது. 'இந்தியாவை-உருவாக்கல்' என்ற கொள்கை, இந்தியாவில் இதுவரை தேக்கமுற்றிருந்த இயந்திர துறைக்கு ஓர் இயங்கு சக்தியை அறிமுகப்படுத்தக்கூடிய தன்மை காணப்படுகின்றது. 'கடல் பட்டு பாதை' இலங்கையின் கேந்திர நிலையத்தினை மூலதனமாக்கிக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுவதோடு குறிப்பாக இது, கப்பல் மற்றும் வர்த்தக அச்சு மற்றும் இலகு பொறியியல் தொடர்பான சேவைகளை குறித்ததாக அமைந்துள்ளது.

இந்தியா அண்மித்திருப்பதும், சீனாவோடு நெருக்கமாக இருப்பதும் நிலைபேறான வளர்ச்சிகளை வெளிநாட்டு நேரடி முதலீடு வழிகாட்டும் ஏற்றுமதி விரிவு மாதிரியானது நிலை மாற்றத்திற்கு பிரதான இயக்கு சக்திகளாக, அமைந்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதியில் 50வீதம் மேலானவை ஐரோப்பா மற்றும் அமெரிக்காவை நோக்கியதாகவே உள்ளது என்பது உணரப்படவேண்டியது தேவையானவொன்றாகும். எனவே இந்த சந்தைகள் ஒன்றுதிரட்டப்பட்டு, கட்டியெழுப்பப்படவேண்டும். அத்தோடு, அமெரிக்க முதலீட்டு நிதிகளானது உள்வரும் இலங்கையினது முறிகள் மற்றும் பங்கு சந்தைகளில், பிரதான பங்கினை கொண்டுள்ளது.

**செயற்பாடுகள்**

- போட்டி நாணயவீதமும், வர்த்தக கொள்கைகளும் குறிப்பாக பாதி தீர்வைகளும் கட்டணங்களும் ஏற்றுமதிக்கு எதிராக பக்கம் சாராதவை ஆகும்.
- ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது தனது ஏற்றுமதி உபாயமுறை ஒன்றை தயாரிப்பதை விரைவாக நிறைவேற்ற வேண்டும். அது பொருட்கள் மற்றும் சந்தை பன்முகப்படுத்தலை முன்னுரிமைபடுத்தப்படவேண்டும்.
- பாரம்பரிய வர்த்தக உறவுகளை ஒன்று திரட்டுதலும் அதை கட்டி எழுப்புகின்ற அதேவேளை பிராந்திய மற்றும் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் மூலமாக சந்தை அடைதலே விரிவுப்படுத்துதல். அத்தோடு நன்கு பேச்சு வார்த்தை செய்யப்பட்ட இந்தியாவுடன் வர்த்தக பொருளாதார பங்கு பெற்றல் ஒப்பந்தத்தையும் , சீனாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தையும் முடிவு செய்தல்.
- வர்த்தக வசதிபடுத்தலை முன்னுரிமை ஆக்குதல். குறிப்பாக சீனா மற்றும் இந்தியா ஊடனான கட்டற்ற வர்த்தக ஒப்பந்தங்களின் நன்மைகளை குறிப்பாக பெற்றுக்கொள்ளுதல் மூலமாக. உதாரணம்- (தன்னியக்க சுங்க பரிசோதனையை முடித்தல், பரஸ்பர ஏற்றுக்கொள்ளல் ஒப்பந்தம் மூலமாக நியமங்களை ஒத்தத்தன்மை ஆக்குதல், மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட சுங்க பரிசோதனைகளை விரைவு படுத்துதல்.)
- நாட்டினுடைய அபிவிருத்தி உபாய முறையோடு (வளர்ச்சித்துறைகள்) தொடர்புடைய முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் முதலீட்டு சபையின் பயனுறுதன்மையை அதிகரித்தல்

- உள்நாட்டு, வெளிநாட்டு இணைப்புகளை மேம்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை தொடருதல்.
- வெளிநாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்களில் வர்த்தக பிரிவுகளை வலுப்படுத்துதல் மூலமாக பொருளாதார ராஜ தந்திரத்தின் இயல் அளவை மேம்படுத்துதல்.
- கம்பனிகள் மற்றும் வியாபார அமைப்புகளுக்கு ஊக்குவிப்புகள் வழங்குதல் மூலமாக முதலீடு மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு அலுவலகங்களை சீனா மற்றும் இந்தியாவில் உள்ள பிரதான நிலையங்களில் அமைத்தல்.
- ஏனைய நாடுகள் செய்துள்ளதை போல சீனாவையும், இந்தியாவையும் வர்த்தகத்திற்கும் முதலீட்டுக்குமான வசதிப்படுத்தும் நிலையங்களை கொழும்பில் நிறுவுமாறு கேட்டுக்கொள்ளல்.

## 05.சிறிய மற்றும் நடுத்தர தொழிற்முயற்சிகள்

நவீன பொருளாதாரத்தில் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் பிரதான மூலமாக அமைந்துள்ளது. ஒட்டுமொத்த வர்த்தக சூழலானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அவற்றின் போட்டித்தன்மைகளையும், சந்தை அடைதலையும் மேம்படுத்துவதற்கு உதவவேண்டும். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர்பான பிரதான உள்ளக சவால்களானவை அவர்களுடைய குறை தரமுள்ள தொழிற்நுட்பம் குறைந்த உற்பத்தி திறன், பொருட்களின் தரம் குறைவு நிதியீட்டல் மற்றும் நிதி ரீதியான முகாமைத்துவம் குறைவாக இருத்தல் மற்றும் திறன்மிகு உழைப்பு பற்றாக்குறை என்பவற்றை உள்ளடக்கியதாகும். அவைகளுடைய விரிவானது, நிறுவன ரீதியான தடைகள் நீண்டதும் கடுமையானதுமான நிர்வாக நடைமுறைகளை ஒழுங்குப்படுத்துதல் சுமை மற்றும் உட்கட்டமைப்பு/ அடிப்படை வசதிகள் என்பவற்றால் கட்டுப்படுத்தப்படுகின்றது.

### செயற்பாடுகள்

- தற்போது அதிக அளவில் சிதறிகிடக்கும் நிறுவன அமைப்பினை நேர்ப்படுத்தி பயனுறு ஆதரவு சேவைகளை வழங்கி ஒருங்கிணைப்பினை முன்னேற்றுதல்.
- பயிற்சி மற்றும் உள்ளீடுகள் (தொழிற்நுட்பம் உட்பட) நிதியீட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றின் ஒழுங்கு முறையானதும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட தலையீடுகள் மூலமாக ஒரு ஒத்த அமைப்பை உருவாக்கி அதன் மூலமாக தொழில் தொடங்குதல், புத்தாக்கம் மற்றும் வியாபார விரிவு என்பவற்றை ஊக்கப்படுத்துதல்.

- உள்நாட்டு மற்றும் சர்வதேச நிரம்பல் தொடர்பிலான இணைவை உருவாக்குதல்/ பலப்படுத்துதல் மூலமாக அதிகரித்த சந்தையை அடைதல். இது மேலும் ஏனைய நன்மைகளான தொழிற்நுட்பம்/ பாரிய தொழில்முயற்சிகளோடு கொண்ட தொடர்புகளினால் நிதியீட்டல் மற்றும் அறிவு என்பவற்றை பெற்றுக்கொள்ளல்.
- பிராந்திய வர்த்தக அமைப்புகளை வலுவூட்டுதலும், இயலளவை வலுவூட்டமும்.

## 06.விவசாய உற்பத்தி திறனை அதிகரித்தல்

விவசாய துறையின் அடிப்படை பிரச்சினையானது அதிகமான மக்கள் மிக குறைவாக உற்பத்தி செய்தல் ஆகும். இதன் விளைவாக மானியம் என்ற வடிவில் பரந்த அளவிலான ஆதரவு, இலவசமான தண்ணீர், நிர்ணயிக்கப்பட்ட விலைகள் மற்றும் வரி விலக்குகள் என்பவை இருந்தாலும் கூட உற்பத்தித் திறனும் வருமானமும் மிக குறைவாகவே காணப்படுகின்றது. இருப்பினும் மக்கள் தொகையில் அதிக பகுதியினர் ஆதரவு நடவடிக்கைகளினால் அளிக்கப்படும் பாதுகாப்பின் காரணமாக விவசாய துறையிலே இருக்கின்றனர். இதனுடைய விளைவு என்னவெனில் நிதி மற்றும் மனித மூல வளங்கள் உற்பத்தி திறன் குறைந்த துறைக்கு தவறாக ஒதுக்கப்பட்டுள்ளமையாகும். இதனால் பொருளாதாரத்தின் புதியதும் அதிக இயக்கமுள்ள துறைகளிலிருந்து அருமையாக உள்ள மூல வளங்கள் திசை திருப்பப்பட்டுள்ளமையாகும். இதற்கு மேலாகவும், சனத்தொகையானது முழுமையான அளவில், உயர் வரிகள் மற்றும் உணவு விலைகள் என்பவற்றினூடாக இந்த செலவு மிகுந்த ஆதரவின் சுமையை ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர்.

### செயற்பாடுகள்

- நிலம் துண்டுகளாக பிரிக்கப்படுவதை தீர்ப்பதற்காக சட்ட சீர்திருத்தங்களும், கொள்கைகளும் அறிமுகப்படுத்தப்படுவதோடு நில ஒன்று திரட்டலுக்கான உற்சாகம் அளித்தல்.
- வர்த்தக ரீதியான இலாபகரமான விவசாயத்தை ஊக்குவித்தலோடு படிப்படியாக திறனற்ற ஆதரவு நடவடிக்கைகளை இல்லாமல் ஆக்குதல்.

இதனால் நிதி மற்றும் மனித மூல வளங்கள் தேவைப்படும். உயர் திறன்மிகு பொருளாதார நடவடிக்கைகளுக்கு கிராமிய வறுமையை நீக்கும் முகமாக விடுவிக்கப்படலாம்.

- விவசாய உற்பத்திக்காக சுகாதார மற்றும் சூழல் நியமங்களை அறிமுகப்படுத்தி தொடர்ந்து காணப்படும் நீண்டகால நுரையீரல் நோய் போன்ற பிரச்சினைகளை தீர்க்க முயற்சிக்கலாம்.
- திருந்திய போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்துதலை ஊக்குவிப்பதன் மூலம் அறுவடைக்கு பிந்திய இழப்புகளை குறைக்கலாம்.
- பல்வேறு விதமான விதைகளையும் விவசாய நடைமுறைகளையும் முன்னேற்றுவதற்காக விஸ்தரிப்பு சேவைகள் மற்றும் ஆராய்ச்சி இயலளவை பலப்படுத்துதலாகும். காலநிலை மாற்றம் காரணமாக அடிக்கடி ஏற்படும் சீதோஷண பாரதூரமான நிலை (வெள்ளம் மற்றும் வரட்சி) என்பவற்றோடு தொடர்புடைய தேவைகளை நிறைவேற்றும் சூழ்நிலையில் இது மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

## 07.கல்வி பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி

இலங்கை குறைந்த கூலி மற்றும் அதிகரித்த தொழிலாளர் நிரம்பலினாலும் நன்மைகளை கொண்ட வளர்ச்சி உபாயத்தில் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது. அபிவிருத்தியின் அடுத்த கட்டத்தை அதிக அளவிலான திறன் உள்ள உழைப்பு மற்றும் முதிர்ந்த சனத்தொகை உள்ள சூழ்நிலையில் ( சனத்தொகையில் வேலை செய்வோர் குறைந்து செல்லல்) தொழிற்நுட்ப உயர்வு என்பவற்றால் இயக்கவேண்டி உள்ளது. மனித வளங்களின் பற்றாக்குறையானது கட்டுப்படுத்தும் காரணியாக செயற்படுவதோடு அபிவிருத்தி எதிர்பார்க்கைகளை தடைப்படுத்துவதாக அமையலாம்.

தற்போதைய கல்வி முறைமையானது உயர்மட்ட பங்குபற்றல் வீதத்துடன் பெண்கள் உட்பட ஒரு வெற்றிகரமான நிலையை அடைந்துள்ளது. எவ்வாறாயினும் கற்றலின் விளைவுகளானவை துரிதமாக நவீனத்துவம் அடைந்துவரும் பொருளாதாரத்தின் தேவைகளோடு ஒத்து செல்வதாக இல்லை. கல்வி, பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி என்பவை நாட்டினுடைய அபிவிருத்தி உபாயத்தோடு ஒத்து செல்வதாக அமையவேண்டும். அதாவது அவை அபிவிருத்தி மாதிரியை இயக்குகின்ற துறைகளின் தேவைகள் ஆகும்.

### செயற்பாடுகள்

- பரீட்சை அடிப்படையிலான கற்றலிலிருந்து முழுமையான கல்வி அமைப்பின் கவனத்தை படைப்பு திறன்/ படைப்பு சிந்தனை மற்றும் புத்தாக்கம் என்பவற்றை வளர்த்தெடுப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் முறைமைக்கு மாற்றுதல் ஆகும்.
- கணிதம், விஞ்ஞானம், மற்றும் ஆங்கிலக் கல்வியை பலப்படுத்துதல்.

- பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தியை நாட்டினுடைய அபிவிருத்தி உபாயத்தின் முன்னுரிமை துறைகளோடு ஒன்றிணைப்பதாகும்.
- மூன்றாம் நிலை கல்வியில் செயற்படக்கூடியதும் தத்துவார்த்த அணுகுமுறைக்கு புறம்பான அடிப்படையில் பொது தனியார் மற்றும் இரண்டும் கலந்த வகையில் அமையக்கூடிய முதலீட்டினை அதிகரித்தல்.
- மூன்றாம் தர மட்டத்தில் தனியார் வழங்கும் கல்வியின் தரத்தை உறுதிப்படுத்தலும் விதிமுறைகளை பலப்படுத்தலும்.
- பலதரப்பட்ட கற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிலையங்களின் தரம், மற்றும் உயர்த்துதலும் மறுசீரமைத்தல். (கிழக்காசியா, ஜெர்மனி என்பவற்றிலிருந்து படிப்பினைகளை பெற்றுக்கொள்ளலாம்.)
- அரசுக்கு சொந்தமான பல்கலைக்கழகங்களை சர்வதேச ரீதியாக போட்டியிட செய்யும் வகையில் சீர்திருத்தம் செய்தல்.

# 08. பெருந்தோட்ட சமூகத்தை வலுவூட்டல்

பெருந்தோட்ட சமூகமானது பெரும்பான்மையான இந்திய தமிழர்களை உள்ளடக்கியதாகவும், புறந்தள்ளப்பட்டு அடக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இச்சமூகம் பொருளாதார சமூக அரசியல் நிலைகளில் பல ஆண்டுகளாக தனிமைப்படுத்தப்ட்ட நிலையில் வாழ்ந்து வந்தமையால் விஷேடமாக கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளது.இந்த சமூகமானது ஏனைய சமூகங்களோடு ஒப்பிடுகையில் சமூக பொருளாதார குறிகாட்டிகளான வாழ்க்கைத்தரம் போஷாக்கின்மை நேர்த்தியான வீடுகள் , வீடுகள் மற்றும் காணி உரிமை சுகாதார தரம் குறிப்பாக மூன்றாம் தர மட்டத்திலான கல்வி அடைவுகள் மற்றும். அரச சேவையில் பங்கு பெறல், பெண்கள் வலுவூட்டப்படல் போன்றவைகளை பொறுத்த வரையில் ஒரு பின்னடைவு காணப்படுகின்றது. அரச சேவையானது குறிப்பாக பிரதேச செயலாளர் மட்டத்தில் அந்த மக்களை முழுமையாக போய் சேரவில்லை புவியியல், பெருந்தோட்டங்களின் அளவு மற்றும் முகாமைத்துவம் என்பவற்றை பொறுத்தவரை இச்சமூகத்துக்குள்ளே காணப்படும் வேறுபாடுகள் மிகுந்த அக்கறையை தோற்றுவித்துள்து. தேசிய நீரோட்டத்தில் ஏனைய சமூகங்களோடு சமமாக இருக்க வேண்டும் என்பதே இம்மக்களின் எதிர்ப்பார்ப்பாகும். தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தியின் குறைபாடுகளில் காணப்படும் இடைவெளிகளை குறைப்பதற்கு முன்னுரிமை அடிப்படையிலான நேர்கணிய நடவடிக்கைகள் அவசியமாகும்.

**நடவடிக்கைகள்**

- ஏனைய சமூகத்தோடு சமநிலையில் இருக்கத்தக்க வகையில் குறிப்பாக கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறுவர்களை மையப்படுத்திய உணவு

வழங்கும் திட்டம் மூலமாக போஷாக்கின்மையை குறைத்தல்

- தோட்டப்புற சுகாதார அமைப்பினை தேசிய சுகாதார அமைப்போடு ஒருங்கிணைத்து உயர்ந்ததும் தரமானதுமான சேவையினை வழங்குதல்
- நேர்த்தியான வீடுகளை சட்டரீதியான உரிமையுடன் வழங்குதலை உறுதி செய்ய பெருந்தோட்ட கம்பெனிகளுடன் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு நன்கொடையாளர்களின் ஒத்துழைப்புடன் நிகழ்ச்சித்திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல்.
- க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரித்து அந்த மாணவர்களை பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு வழி வகுத்தல்.
- அரச துறையில் குறிப்பாக உயர் மட்டங்களில் பதவி பெற்றுக் கொள்வதை அதிகரிக்க திட்டங்களை தயாரித்தல்
- தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வலுவூட்டச் செய்தல்.
- உள்ளூர் மட்ட அரச சேவையினை அச்சமூகம் முழுமையாக பெற்றுக் கொள்வதற்கான முறைமைகளை அபிவிருத்திச் செய்தல்
- தெற்கு மற்றும் சபரகமுவா மாகாணங்களுக்கிடையே வாழுகின்றவர்களிடையே காணப்படும் உள் வேறுபாடுகளை குறைப்பதற்கு விஷேட திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.
- பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுக்கும் தோட்டத்துறைக்கும் இடையே குறிப்பாக கல்வி, போஷாக்கின்மை, சுகாதாரம், வசிப்பிடம்

என்பவற்றில் காணப்படும் இடைவெளிகளை குறைப்பதற்கு பல்தரப்பட்ட நன்கொடையாளர்களுக்காக (அரசாங்கம், தனியார் தொழில் முயற்சித்துறை பல்புடையாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்) ஒரு மத்திய தவனை உபாய முறையை அபிவிருத்தி செய்தல்.

## 09.அரசுடமை தொழிற்முயற்சிகளின் (அ.தொ) சீர்திருத்தம்

இலங்கையில், பல்வேறு சட்ட அமைப்பிற்குள் 300க்கு மேற்பட்ட அரசுடமை தொழிற்முயற்சிகள் காணப்படுகின்றன. இத்தொழிற்முயற்சிகளின் ஒட்டுமொத்த செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்படுகின்ற அதேவேளை அவை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான சாத்தியத்தில் ஒரு தடையாக தொடர்ந்து இருந்துவருகின்றது. இவற்றின் வருமான விளைவு வீதங்கள் குறைவாகவும், சில நட்டங்களையும் மீள்செலுத்துதலில் தாமதங்களையும் கொண்டுள்ளதோடு வங்கிகளின் நிலுவைகளில் எதிர்மறை மீதிகளை காட்டி அரசாங்கத்தின் நிச்சயமற்ற பொறுப்புகளை பெருப்பித்து அதனது நிதி நிலைபேற்றுதன்மையை பலவீனப்படுத்துகின்றது. இத்தொழிற்முயற்சிகள் அவைகளால் உள்வாங்கப்பட்ட கணிசமான நிதி மற்றும் மனித வளங்களுக்கு குறைவான விளைவு வீதங்களை அளிப்பதன் மூலம் நாட்டினது அபிவிருத்தி சாத்தியங்களை தடைப்படுத்துகின்றன. இத்தொழிற்முயற்சிகளின் சீர்திருத்தங்களானவை, நாட்டினது வளர்ச்சி சட்டகத்திற்கு உற்பத்தி திறன்/ போட்டித்தன்மை என்பவற்றை அதிகரிப்பதன் மூலம் கணிசமான அளவிற்கு பங்களிக்க முடியும்.

### செயற்பாடுகள்

- தீர்மானம் செய்யும் செயல்முறையில் சுயாதீனத்தன்மையையும், வகை கூறுதலையும் அதிகரிக்கும் அதே வேளை தொழிற்முயற்சிகளின் பணிப்பாளர் சபையையும் முகாமைத்துவத்தையும் வலுப்படுத்துதல்.
- தனியார்மயப்படுத்தல் (தொழிலாளர்களின் பங்குடமை உட்பட ) தனியார் பொதுத்துறை பங்கேற்றல் சார்பான நடைமுறை சார்ந்த பண்பினை, தனியார்

மற்றும் தொழிலாளர் பங்குடைமையில் மேற்கொள்வதன் மூலம், வர்த்தக ரீதியான அரசுடமை தாபனங்களின் உடமை அமைப்பில் நெகிழ்ச்சி தன்மையை அறிமுகப்படுத்துதல்.

- பெரும்பான்மை தனியார் உடமை சாத்தியமற்ற நிலையில் வர்த்தக மயமான தொழிற்முயற்சிகளின் சிறுபான்மை உரித்துகளை பங்கு சந்தையில் நிரல்படுத்துவதன் மூலம், அதிகரித்த வெளிப்படுத்துகையை கொண்டு வரலாம். இதனால் வர்த்தக நல்லாட்சியை வலுப்படுத்தி செயற்பாட்டு திறனை அதிகரித்தல்.
- சந்தை குறிகாட்டிகளுக்கு ஈடுகொடுக்க செயற்பாடு சுதந்திரத்தை அதிகரித்தல். இதன் மூலம் பின்வரும் தேவைகள் குறைக்கப்படலாம். i. கட்டுப்படுத்தப்பட்டுள்ள வரவு செலவு திட்டத்தின் அரசாங்க உதவி.
  ii. போட்டியை மட்டுப்படுத்தும் பாதுகாப்பு தடைகளால் விலைகள் அதிகரித்தல் மற்றும் நுகர்வோருக்கான தரம் குறைத்தல். சர்வதேச நியமங்களுக்கெதிராக, அரசுடைமை தனியுரிமைகளின் செயற்பாட்டின் ஒப்பிடல்.
- கோப் அறிக்கைகளில் காணப்படும் கண்டுபிடிப்புகள் துரிதமாகவும் திறனாகவும் செயற்படுத்துதல்.

## 10.திறன்மிகு பொதுச்சேவை வழங்குதலை நோக்கி

கொள்கை உருவாக்கம் மற்றும் சேவை வழங்கல் என்பனவற்றை பொறுத்தவரை ஒரு பொருளாதாரத்தின் போட்டித்தன்மையை நிர்ணயிப்பதல் முக்கியமான ஒன்று பொதுச்சேவையின் திறனாகும். நவீன பொருளாதாரங்கள், தாராளமயப்படுத்தப்பட்ட சந்தைகளின் போட்டி நலன்களை சமப்படுத்தும் முகமாக நன்கு உருவாக்கப்பட்ட விதிமுறைகளுக்கு முக்கிய இடத்தை கொடுக்கின்றன. மேலாக, திறனான சேவை வழங்கல் என்பது போட்டித்தன்மைமிகு பொருளாதாரத்தை அடைந்துக்கொள்ள முக்கியமாக

இருப்பதோடு, சமூகத்தின் ஏழ்மையான மற்றும் பலவீனமான மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் அவசியமான ஒன்றாகும். ஒரு தனியாள் என்ற அடிப்படையில், இலங்கையின் பொதுச்சேவை என்பது, உலகில் பெரிய அளவிலானவற்றில் ஒன்றாகும். 2005இல் 600000 இலிருந்து இன்று இது 1.4மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. இது கணிசமான மனித மற்றும் நிதி மூலங்களை உள்ளீர்ப்பதோடு மிகக்குறைந்த விளைவினையே தருகிறது.

உற்பத்தி திறன், கூட்டுணர்வு மற்றும் வகை கூறும்தன்மை என்பவற்றிற்கும் அளவினை குறைப்பதற்கும் உயரிய முன்னுரிமை வழங்கவேண்டியுள்ளது. குறைந்த – மத்திய வருமான நாடாக சலுகைமிக்க நிதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், இலங்கை பொதுச்சேவையை வேலை வழங்கும் முகவராக இனியும் பாவிக்க முடியாது. இது பொருளாதாரத்தை போட்டிமிக்கத் தன்மையில் வைப்பதற்கு அதிக பயனை தருவதோடு, இளைஞர்கள் சிறந்த கல்வி, பயிற்சி,

திறன் அபிவிருத்தி ஊடாக வலுப்படுத்தி, உயர் பெறுமதிமிக்க தொழில் வாய்ப்புகளுடன் நவீன பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகும்.

**செயற்பாடுகள்**

- இயற்கையான இழப்புகள் மற்றும் விருப்புசார்ந்த மேலதிக முறைமை மூலமாக பொதுச்சேவைகளின் அளவினை குறைத்தல், ஏனைய நாடுகளின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளல். மாற்று தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்தும் நிலைமைகளை உருவாக்கும் வகையிலான கொள்கைகள், வடிவமைக்கப்படுவதோடு கவனமான தொடர்களை மையப்படுத்தி கவனிக்கப்படவேண்டும்.
- அரசாங்க ஊழியரின் சுயாதீன தன்மையையும் வகை கூறும் தன்மையையும் அதிகரித்தல்.
- சுதந்திரமானதும், கேள்வி அடிப்படையிலான ஆட்சேர்ப்பு திட்டத்தினை அறிமுகப்படுத்துதல்.
- நியமனங்கள், பதவி உயர்வுகள் என்பவற்றிற்கு சுதந்திரமான நிறுவன ஏற்பாட்டினை அறிமுகப்படுத்துதல்.
- உட்சேர்ப்பை வலுப்படுத்துவதோடு அதைத் தொடர்ந்த சேவையிலான பயிற்சி திட்டத்தை பலப்படுத்துதல்.
- செயலாற்றல் மதிப்பிடலை முன்னேற்றுதலும் செயலாற்றல் அடிப்படையிலான கொடுப்பனவு முறைமையை கடைப்பிடிப்பதற்கு வழிவகைகளை ஆராய்தல்.
- சேவை வழங்கலை முன்னேற்றுவதற்கு மின்னியல் தகவல் தளத்தையும், தகவல் தொடர்பாடல் தொழிற்நுட்ப தீர்வுகளை உபயோகித்தல்.

## 11.சமூக பாதுகாப்பு

ஒரு அதிகரித்த போட்டிமிக்க பொருளாதாரத்திற்கான முன்னேற்றத்தை துரிதப்படுத்துகையில், நன்கு வடிவமைக்கப்பட்டதும், இலக்கிடப்பட்டதும் மற்றும் திறன்மிக்கதுமான ஒரு சமூக பாதுகாப்பு வலையமைப்பு மிக முக்கியமான ஒன்றாகும். இலங்கையின் பொருளாதார அமைப்பு உருவாகும்போது, தவிர்க்க முடியாத கொடுக்கல் வாங்கல் செலவினை சமாளிக்க, சமூக பாதுகாப்பு வழங்குவது மிக முக்கியமான ஒன்றாகும். இதற்கு அடிநாதமாக அமையவேண்டிய கொள்கையானது, தொழிலாளர்களை பாதுகாப்பதே அன்றி, உற்பத்தியற்ற வேலைகள் அல்ல. இரண்டாவது நோக்கம், சமூகத்தின் வறிய மற்றும் பலவீனமான பகுதியினருக்கு ஆதரவளிப்பதாகும். இந்த இரு பிரிவினருக்குமான சமூக பாதுகாப்பானது நன்கு வடிவமைக்கப்பட்ட வருமான மாற்று திட்டமாக இருக்கவேண்டுமேயொழிய, மானியங்களாகவோ அல்லது உறுதியளிக்கப்பட்ட விலைகளை அடிப்படையாக கொண்டதாக அமையக்கூடாது. ஏனெனில் இவை, திறனற்ற வள உபயோகத்திற்கு காரணமாக அமைந்து விடுகின்றது. அத்தோடு அவை, மக்களின் மீது உயர்வரிகள் மற்றும் விலைகள் மூலமாக, ஒரு அதிகரித்த சுமையை ஏற்படுத்தி பாதகமான விளைவுகளை உருவாக்கக்கூடியதாகும்.

இலங்கை, மிகவும் தவறாக வடிவமைக்கப்பட்டதும் இலக்கிடப்பட்டதுமான சமூக பாதுகாப்பினை உள்ளடக்கிய நீண்ட பாரம்பரியத்தை கொண்டது. தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களும் அவற்றிற்கு விதிவிலக்கானவை அல்ல.

**செயற்பாடுகள்**

- கவனமாக நிர்ணயிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழுள்ளோருக்கு ஒரு வருமான மாற்று திட்டத்தை வடிவமைத்தல்.
- பொருளாதார முன்னேற்றம் காரணமாக தொழில் இழந்தவர்களுக்கு கால அடிப்படையில் அமைந்த வருமான ஆதரவினை வழங்குதல்.
- சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கான சேவை வழங்கும் அமைப்பினை தொழிற்நுட்ப முன்னேற்றங்களை பாவித்து, வலுப்படுத்துதல்.

## 12.உருவாகிவரும் பாரிய செல்நெறிகளை சாதகமாக்கிக்கொள்ளல்

நாட்டிற்கான முன்னோக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாக பாரிய செல்நெறிகள் சிலவற்றில் கவனஞ்செலுத்தவேண்டிய தேவையொன்று உள்ளது. நகரமயமாக்கல், ஆண்டொன்றிற்கு சனத்தொகையில் 3%மாக இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகரித்த நிலையில் ஆர்வமிகுந்த மற்றும் வளர்ந்து செல்கின்ற எதிர்பார்க்கைகளை நிறைவேற்ற, புதிய நகரங்களை உயர்தர வாழ்க்கைத் தரத்தோடு உருவாக்குவதற்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டியுள்ளது. இது, உட்கட்டமைப்பு, வீடமைப்பு, வர்த்தகம் மற்றும் ஒய்விற்கான இடம் என்பவற்றில் முதலீடு தேவைப்படுகின்றது. இதனோடு தொடர்புபட்ட வகையில் நடைமுறையிலுள்ள ‘‘மெட்ரோ-பிராந்தியம்’’ மற்றும் ‘இரண்டாம் நிலை நகரங்கள்’ அபிவிருத்தி திட்டங்களோடு கட்டியெழுப்பப்பட்டு அவற்றின் மூலமாக பிராந்திய ரீதியான சமத்துவ அபிவிருத்தியை நாட்டின் பல பாகங்களிலும் வளர்ச்சி மையங்களை வளர்த்தெடுக்கவேண்டும்.

காலநிலை மாற்றமானது, எல்லா நாடுகளிலும் அபிவிருத்தி வெளிப்பாடுகளில் அதிகரித்த பாதிப்பினை ஏற்படுத்துமென்பது சாத்தியமாக காணப்படுகின்றது. இதனால் இவை, கொள்கை உருவாக்கத்தில் உள்வாங்கப்பட வேண்டிய தேவை உண்டு. அதிக அளவில் அடிக்கடி ஏற்படும் மிகவும் பாரதூரமான சுவாத்திய நிகழ்வுகளுக்கு ஏற்ற நடவடிக்கைகளும், இடர் முகாமைத்துவமும் மேற்கொள்ள உயர் முன்னுரிமை அளிக்கவேண்டியுள்ளது. அத்துடன் சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா காபனீரொட்சைட்டு வாயுவின் (co2) வெளியேற்றங்களை குறைத்தல் பற்றிய

சமீபத்திய உறுதிமொழிகள் கொயட்டா நடத்தைகோவை ஐ.நா சர்வதேச காலநிலை மாநாட்டின் பிந்திய ஒப்பந்தம் நீடிக்கவேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது. இத்தகைய ஒப்பந்தத்தின் விளைவுகளை, எதிர்காலகொள்கை உருவாக்கத்தில் உள்வாங்கவேண்டியுள்ளது.

இதனுடைய ஒரு விளைவானது மீள்புதுப்பிக்கக்கூடிய சக்தியின் அதிக அளவிலான உபயோகத்தை நோக்கிய சர்வதேச ஒப்பந்தமாகும். இந்தவகையில், இலங்கையின் சூழ்நிலையை பொறுத்தவரை சூரிய மற்றும் வளி சக்தியின் உள்ளார்ந்தங்களை ஆராய்வதற்கு முன்னுரிமை வழங்குதலாகும்.
‘தூய சக்தி’க்கான மாற்றமும் துரித செயற்பாட்டினை வேண்டி நிற்பதோடு அது, இலங்கையின் இயற்கை வாயு கண்டுபிடிப்புகளை அபிவிருத்தி செய்வதோடு அவை வரலாற்று ரீதியில் பாரிய எண்ணெய் இறக்குமதி செலவில் ஒரு நேர்க்கணிய தாக்கத்தை கொண்டு வரலாம். அரசாங்கம் சமீபத்தில் அறிவித்த “சக்தி உபாய முறை” அதனுடைய துரித நடைமுறைக்கு முன்னர், உரித்தாளர்களுடன் கலந்தாலோசனைக்கு உட்படுத்தல் வேண்டும்.

பாரிய தொழிற்நுட்ப போக்குகளான, பெரும் தரவு, முகில் தொழிற்நுட்பம், நேர்த்தியாக தொடர்புபடுத்தப்பட்ட கருவிகள் மற்றும் முன்னேறிய ரோபோடிக்ஸ் (அறிவு வேலையின் தன்னியக்கம் உட்பட) என்பன, சந்தர்ப்பங்களை உருவாக்குவதோடு தடைகளையும் ஏற்படுத்தலாம். இலங்கை இத்தகைய செல்நெறிகளுக்கு உள்நாட்டு நோக்கில், சந்தர்ப்பங்கள் மற்றும் தடைகள் என்பவற்றை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட அனைத்து பொருட்களையும் நீக்கக்கூடிய உலக வர்த்தக ஸ்தாபனத்தின் தகவல் தொழிற்நுட்ப

ஒப்பந்தத்தில் (த.தொ.ஒ) கையொப்பமிடுவதற்கு ஒரு நியாயம் உண்டு. தற்போது தகவல் தொழிற்நுட்ப பொருட்களில் 77.5%க்கு மேலானவை தீர்வை விதிப்பிற்கு உட்படுத்தப்படவில்லை. சராசரி தீர்வை வீதம் 4% மட்டுமே. எனவே தீர்வை முறைமையில் பாரிய மாற்றங்கள் இராததோடு, வருமானத்தில் இழப்பை ஏற்படுத்தாது. அதிகமான இறக்குமதிகள் மூலதனப்பொருட்களாக அமைந்து, அவை இத்துறையின் உற்பத்தி செலவினை குறைப்பதற்கு உதவுவதோடு வளர்ச்சிக்கு கணிசமான உள்ளார்ந்தங்களை கொண்டிருக்கும். மேலும், த.தொ.ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் என்பது, தீர்வைகளை ஒரு நிலையான மட்டத்தில் வைத்து அதன் மூலமாக, நீண்டகால திட்டமிடலை வசதிப்படுத்தும். இது, இலங்கை, த.தொ.துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டோர் முதலீடுவதற்கான கவர்ச்சித் தன்மையை பெருப்பிப்பதாக அமையும்.

**முடிவுரை**

இலங்கை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அதிகளவிலான வெற்றி தரக்கூடிய சாதகமான சூழ்நிலைகள் பலவற்றை கொண்டிருந்தது. கடந்த ஐந்து தசாப்தங்களிலும், நாட்டினது பொருளாதார சுபீட்சத்தினை பின் தள்ளக்கூடிய பலவிதமான தடைகள் காணப்பட்டன. இவை வர்த்தக மீதியின் குறை, அதிகரித்த சனத்தொகையும் உயர் தங்கியிருக்கும் தன்மையும், பொருத்தமற்ற உள்நோக்கிய கொள்கை மற்றும், மிகவும் பாதிப்பை ஏற்படுத்திய உள்நாட்டு முரண்பாடு போன்றவை ஆகும். இன்று, பொருளாதார சுபீட்சத்தை பின் தள்ளக்கூடிய பிரதான காரணிகள் காணப்படவில்லை. மேலும், பொருளாதாரப் புவியியல் இன்று மிக சாதகமாக காணப்படுகின்றது. இலங்கை, உலகில் மிகவும் இயக்கமுள்ள பிராந்தியமான ஆசியாவில் அமைவிடம் கொண்டுள்ளது. அத்தோடு உலகப் பொருளாதாரத்தின் உருவாகிவரும் இரு பெரும் நாடுகளான சீனாவோடு நெருங்கிய தொடர்புகளை கொண்டிருப்பதோடு இந்தியாவிற்கு அண்மித்ததாகவும், இருப்பது பல அனுகூலங்களை தரக்கூடியதாகும். எவ்வாறாயினும், அத்தகைய நேர்க்கணியமான வரலாற்று சூழ்நிலைகளின் சங்கமத்தின் பலாபலன்களை பெற்றுக்கொள்வது பொருளாதாரத்தின் உற்பத்திதிறன்/ போட்டித்திறனை அதிகரிக்கக்கூடியதும், வளர்ச்சி சட்டகத்தை வலுப்படுத்தக்கூடியதுமான ஒரு கூட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமே சாத்தியமாகும். இவ்வழிகாட்டி ஆவணமானது முன்னோக்கிய பாதையை வழிப்படுத்துவதற்கு பங்களிப்பதோடு, பலவித தெரிவுகளையும் முன்வைக்கின்றது. இன்றைய அரசாங்கம், மாற்றங்களின் தொடர்ச்சியையும், அதனது வேகத்தையும் சரியானமுறையில் அளவிடவேண்டியுள்ளது. ஒட்டுமொத்த மாற்றமானது, இலங்கையரின்

இயலுமைகளை வெளிப்படுத்தும், உரித்துகளின் கலாச்சாரத்திலிருந்து விடுபட்டு குறிப்பாக இளைஞர்களை வலுப்படுத்துதல். ஒருபுறத்தில் மனிதவள அபிவிருத்திக்கான அதிகரித்த சந்தர்ப்பங்களை மறுபுறத்தில் உற்பத்திதிறன் உயர் பெறுமதிமிக்க வேலைவாய்ப்புகள் என்ற அடிப்படையில் அமையவேண்டும்.

பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர் ஆட்சி அமைக்கும் அரசாங்கம் பேரண்ட பொருளாதார அடிப்படைகள் கீழ்நிலையடைதல் மற்றும் வளர்ச்சி உள்ளார்ந்தங்களின் இழப்பு போன்ற இரட்டை சவால்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும். உடனடியானதும், தீர்க்கமானதுமான நடவடிக்கை, பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும், வளர்ச்சி சட்டகத்தை, வேகமாக நடைமுறைப்படுத்தக்கூடிய அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களை கொண்ட பொதியின் மூலமாக பலப்படுத்துதல், தேவையாக இருக்கும். இலங்கை மக்கள் தற்போது எதிர்பார்ப்பு மிக்கவர்களாகவும், பொறுமை இழந்தும் காணப்படுகின்றனர். வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதை வழங்குகின்ற இயலுமையை கொண்டே அரசாங்கங்கள் மதிப்பிடப்படும். பழமையான நிறுத்தி – செல்லல் போன்ற கொள்கைகள், அன்பளிப்புகள் வழங்கி மக்களை ஏமாற்றி, அவர்கள் மீது சுமைகளை ஏற்றுவது எதிர்காலத்தில் அரசியல் மற்றும் சமூக ரீதியாகவும் சாத்தியமான ஒன்றல்ல. நாடு பொருளாதார கொள்கை உருவாக்கலில் ஒரு பாரிய மாற்றத்தையும் கடந்த காலத்தின் குறுங்கால அரசியல் ரீதியான சந்தர்ப்பவாதத்தன்மையிலிருந்து விடுபடவேண்டி நிற்கின்றது. இந்த ஆவணமானது, ஒரு மத்திய தவணை காலத்தில் நல்ல பொருளாதாரம் மற்றும் நல்ல அரசியல் அடிப்படையில், முன்னோக்கிய பாதையை வழிகாட்டுதலுக்கான வழிவகைகள் சம்பந்தமாக அரசியல் கட்சிகளுக்கு தெரிவிக்க விரும்புகின்றது.